ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1756/30 - 2012 මැයි 04 වැනි සිකුරාදා - 2012.05.04

*1756/30 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சுங்க அறிவித்தல்

*சுங்கக் கட்டளைச் (அத்தியாயம் 235) சட்டத்தின் 101 ஆம் பிரிவின் கீழான ஒழுங்கு விதி*

**தரவு செயல்படுத்துகை கருவிகளுக்கான மென்பொருளைக் கொண்ட ஊடக சாதனம் தொடர்பிலான பெறுமதி மதிப்பீடு**

1. மஹிந்த ராஜபக்ஷ, நிதி திட்டமிடல் அமைச்சர் ஆகிய நான், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 101(1)(ஏ) ஆம் பிரிவின் மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், இறுப்புகள் மற்றும் வர்த்தகம் என்பன மீதான பொது உடன்படிக்கையின் vii ஆம் உறுப்புரை தொடர்பிலான அமுல்படுத்துகை மீதான உடன்படிக்கை தொடர்பில் திருப்தியடைவதோடு, இதன் பின்னர் தரவு அல்லது மென்பொருள் அறிவுறுத்தலைக் கொண்ட இறக்குமதி செய்யப்பட்ட ஊடக சாதனங்கள் தொடர்பில் சுங்கப் பெறுமானத்தைத் தீர்மானிக்கும்போது ஊடக சாதனத்திற்கான செலவு மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படுமென இத்தால் தெரியப்படுத்துகின்றேன். எனவே, சுங்கத் தீர்வையின்போது தரவு அல்லது மென்பொருள் அறிவுறுத்துகையின் செலவு, ஊடக சாதனத்தின் செலவு அல்லது பெறுமதியுடன் வேறுபடுத்தி காண்பிக்கும் பட்சத்தில், தரவு அல்லது மென்பொருள் அறிவுறுத்துகையின் செலவு உள்ளடக்கப்படமாட்டாது.

2. இங்கு "ஊடக சாதனம்" எனப்படும் வகையினுள் ஒருங்கிணைந்த சுற்றுக்கள், பகுதி செலுத்திகள் மற்றும் அவற்றிற்கு ஒப்பான கருவிப்பாகங்கள் அல்லது அத்தகைய ஒருங்கிணைந்த சுற்றுக்கள் அல்லது கருவிப் பாகங்களுடன் சம்பந்தப்பட்ட பொருட்கள் போன்றன அடங்காது, மேலும், "தரவு அல்லது மென்பொருள் அறிவுறுத்துகைகள் " எனப்படும் வகையினுள் ஒலி, ஒளிப் பதிவுகள், திரைப்படம் சார்ந்தவை போன்றன உள்ளடங்காது.

3. இந்த ஒழுங்கு விதிகள் 2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சுங்கப் பெறுமதி மதிப்பிடல் ஒழுங்கு விதிகள் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 2012 ஆம் ஆண்டு மே 04 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு,
2012, ஏப்ரல் 18.

05 - 520